தமிழினத்தின் அச்சம், நம்பிக்கையீனம், ஏக்கம் எல்லாவற்றிற்கும் முடிவொன்று வேண்டும்.

தமிழினத்தின் மனங்களில் மகிழ்ச்சி பொங்கவில்லை.

துன்பமே பொங்கி வழிகின்றது.

இந்த நிலையில் பாரம்பரியமான எமது விழாவைக் கொண்டாட மனங்களில் எப்படி மகிழ்ச்சி வரும்?

மகிழ்ச்சி பொங்க வேண்டுமென்றால் .... தமிழர் மகிழ்வாகத் தைப்பொங்கலைக் கொண்டாட வேண்டுமென்றால் விடிவு வேண்டும்.

துன்ப துயரங்களுக்கு முடிவொன்று வேண்டும். நடமாட முடியாத கொடிய சூழல் விரட்டியடிக்கப்பட்டு தமிழினம் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய காலம் கனிய வேண்டும்.

இரையெடுக்கப்படுவதில் இருந்து நாம் மீள வேண்டும்.

அவலநிலை தொடரக் கூடாது என்பதை நாம் எமது மனதுள் பொங்கலிட வேண்டும்.

எப்போது எமது வாழ்வு உரிமையோடு பாதுகாப்போடு அமையுமோ அன்றுதான் வெறும் வாக்குறுதிகளை நம்பாத மகிழ்வான வாழ்வமைந்த நம்பிக்கையுடன் பொங்கலோ பொங்கலென பாடி ஆடிப் பொங்குவோம்.

அதுவரை சம்பிரதாயப் பொங்கல்தான்.

பிரதேசத்துக்குப் பிரதேசம் பொங்கல் வேறுபாடாய் நடக்கும். அது பிரச்சினையில்லை.

உழவன் உழைப்போர் என்பதும் பிரச்சினையில்லை.

தமிழர் அனைவரும் ஒன்றாகப் பொங்கலிட்டு உலக சமுதாயத்துக்கு முன்மாதிரியாக சுதந்திர மண்ணில் தமிழரின் பெருமைக்குரிய பொங்கல் விழா பொங்க வேண்டும்.

# ஈழ விடுதலைப் போராட்டம்: அதன் எதிர்காலம் என்னாகும் ?

உலகில் எந்த ஒரு தேசிய இனப் போராட்டமும் இப்படி ஒரு பேரிழப்பை சந்தித்ததில்லை. இழப்பு பேரிழப்புதான்.

மக்களோடு போராளிகளும் அதன் மதிப்புமிக்க பல தலைவர்களும் மடிந்திருக்கிறார்கள். வஞ்சகத்தால் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள். என்றாலும், உணர்வுள்ள போராளிகளும் அதன் தலைவர்களும் எஞ்சிய மக்களும் இருக்கும் வரைக்கும் தமிழீழ முழக்கம் எழுந்தே தீரும்.

விடுதலையை வென்றே தீருவார்கள். ஆனால், நடந்த நிகழ்வுகளிலிருந்து இந்தப் படிப்பினையிலிருந்து நாம் பாடம் பெறவேண்டும்.

சும்மா வெட்டிப் பேச்சு, வீரவசனங்கள் பேசிக் கொண்டிருக்காமல், பிரச்சினையின் ஆழத்தையும், தீவிரத்தையும் மக்களிடம் சொல்லி மக்களைத் தட்டி எழுப்ப வேண்டும். தமிழ்நாட்டில் தமிழீழ ஆதரவு அமைப்புகளை, தமிழ்த் தேசிய சக்திகளை ஓரணியில் திரட்ட வேண்டும்.

உலகம் முழுதும் சிதறி கிடக்கும் தமிழர்கள் குரல் கொடுக்க தொடங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் அரசியல்கட்சிகள் தனித்தனியாகக் குரல் எழுப்புகிறார்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

ஆனால் இதுபோதாது. ஒன்றுபட்ட போராட்டம் வலிமையாக ஏற்பட வழி காணவேண்டும். ஒப்புக்கு சப்பாணி போல் இருக்கக்கூடாது. இந்திய அரசு தமிழர்களுக்கு செய்த துரோகத்துக்கு எதிர் வினையாற்ற முன்வரவேண்டும்.

தமிழகத்தில் இயங்கும் சிறுசிறு அமைப்புகளை ஒன்றிணைக்க வேண்டும். உலகத் தமிழர்கள் ஒன்றிணைவார்கள். மக்களது தொடர் போராட்டம் நமக்கான திசையைக் காட்டும் என்பது உறுதி.

ஐ.நா பொதுச்செயலாளர் பான் கி மூன் கூறியது போல“தமிழர்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும். இல்லையேல் மீண்டும் தேசிய இனப்போர் தவிர்க்க முடியாததாகி விடும்”.

தமிழீழ மக்கள் மீதான ஒடுக்குமுறை நிலவும் வரை, நீடிக்கும் வரை தமிழீழத்திற்கான குரல் ஓங்கி ஒலிக்கவே செய்யும். அதற்கான போராட்டமும் தொடரும். இதுதான் தற்போதைய ஈழத்தின் வரலாறாகவும் அமையும்.

புல்வேறு தேசிய இனப் போராட்டங்களையும் ஆதரித்த உலக நாடுகள் ஈழ விடுதலை போராட்டத்தை கைவிட்டது ஏன்?

ஒன்றைப் புரிந்து கொள்வது நல்லது.

தற்போது உலக நாடுகள் எதுவும் தேசிய இனப் போராட்டங்களை அதன் நியாய நோக்கில் அணுகுவதில்லை. மாறாக, அவற்றை ஆதரிப்பதால் அல்லது எதிர்ப்பதால் ஏற்படும் பலாபலன் கள்,அரசு நலன்களை வைத்தே முடிவு செய்கின்றன.

எடுத்துக்காட்டாக, கொசோவா விடுதலைப் போராட்டம்,

இதை அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஆதரிக்கின்றன. ரஷ்யா எதிர்க்கிறது. தனக்கு பக்கத்திலேயே ஐரோப்பிய நாடுகள் வருவதை ரஷ்யா விரும்பவில்லை. ஆனால் ரஷ்யாவுக்கு மிக அருகில் தங்களுக்கு ஒரு தளம் அமையவேண்டும் என ஐரோப்பிய நாடுகள் கருதுகின்றன.

இங்கே இந்தியாவைப் பாருங்கள். திபெத்தை இந்தியா ஆதரிக்கிறது. தலாய்லாமா தர்மசாலாவில் தங்கி திபெத்திய விடுதலையை முன்னெடுக்கிறார்.

திபெத் விடுதலைப் போராட்டம் சீனாவுக்கு எதிரானது என்பதால் இந்தியா அதை ஆதரிக்கிறது. ஆனால் ஈழப் போராட்டத்தை எதிர்த்து இலங்கை அரசுக்கு உதவுகிறது.

இப்படி இலங்கையை இந்தியா ஆதரிப்பதால் தான், இலங்கையை ஆதரிக்கும் இந்தியாவை எதிர்க்க உலக நாடுகள் தயக்கம் காட்டுகின்றன.

100 கோடிக்கும் மேல் மக்கள் தொகையும், மிகப் பெரும் சந்தையையும், உலகிலேயே நான்காவது நிலையில் வலிமை மிக்க இராணுவத்தையும் கொண்ட பெரிய நாடு இந்தியா, எனவே, இந்தியாவைப் பகைத்துக் கொள்ள உலக நாடுகள் விரும்பவில்லை.

இதனால்தான் ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான சுவிட்சர்லாந்து கொண்டு வர முயன்ற தீர்மானத்தை முதலில் ஆதரித்த நாடுகளும்- இந்தியா அதை எதிர்த்து இலங்கைக்கு ஆதரவாக நிற்பதைப் பார்த்து, அந்தத் தீர்மானத்தைத் தோல்வியுறச் செய்தன.

அந்நாடுகளின் பன்னாட்டுச் சந்தை இங்கு விரிவுபடுத்தப்படுகிறது.

அவர்களின் நாட்டு நலன் இந்தி யாவில் உள்ளது.

இதனாலேயே உலக நாடுகளின் ஆதரவு ஈழத்திற்குக் கிட்டாமல் போய்விட்டது.

ஆகவே இந்த உண்மை நிலையை நாம் உணரவேண்டும்.

மக்களுக்கும் உணர்த்தவேண்டும்.

இந்திய அரசின் நிலைப்பாட்டை- வெளியுறவுக் கொள்கையை எமக்குச் சார்பாக மாற்றுவதற்கு தமிழகத்தின் ஆதரவை உறுதிசெய்து கொள்வது மிகவும் அவசியம்.

